# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 3
ஜமா. அவ். 6
ஞாயிறு (16-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 89
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60


# ஒரே அமைப்பு!
# ஒரே தலைமை!
# ஒரே கொள்கை!
# ஒரே கொடி!!

## அரசியல் மடல்

**அன்பு நண்பா**

யாழ்ப்பாணத்தில் 8-4-78 சனிக்கிழமை கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய பொதுக்குழு, கூட்டணியின் வரலாற்றில் மற்றுமொரு திருப்பத்துக்கு — வித்திட்டுள்ளது; பச்சை விளக்கு காட்டியுள்ளது.

ஆம் நண்பா, இதுவரை காலமும் பல்வேறு கட்சிகளினதும், அமைப்புக்களினதும், ஒரு கூட்டமைப்பாக — திட்டவட்டமான முறையான நிரந்தர யாப்பு ஏதுமின்றி — உணர்வு அடிப்படையில் மட்டுமே சேர்ந்து இயங்கி வந்த தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு — தனியான ஒரு யாப்பை—தனியான ஒரு அமைப்பு வடிவத்தை அங்கீகரித்திருக்கிறது அதன் பொதுக்குழு!

ஓர் அமைப்பு கட்டுக்கோப்புள்ளதாகவும் இறுக்கமுள்ளதாகவும் வலிவுடனும் பொலிவுடனும் இயங்குவதற்கு முறையான அமைப்பு விதிகள்—யாப்பு—அவசியமானதாகும். இத்தகையதொரு யாப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போதுதான் தனக்கென உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஒரே கொள்கை, ஒரே தலைமை, ஒரே கொடி கொண்ட தனியொரு அமைப்பாக—பரந்த ஜனநாயக அமைப்பாக—தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்குவதற்கு புதிய யாப்பு மூலம் வழிவகுக்கப்பட்டுள்ளது.

கட்சி அரசியல் பேதங்களுக்கு ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு 'தனித்தமிழ்ஈழம்' என்ற முடிவான விடுதலை இலட்சியத்தின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரே அமைப்பாக இப்போது உருவாகிவருகிறது. இது கூட்டணியின் வளர்ச்சியில் ஒரு பெரிய திருப்பம் என்பதை எவருமே மறுத்திடமுடியாது! வெவ்வேறு அமைப்புக்களிலிருந்து இலட்சியத்தால்—இன உணர்வால் ஒன்றிணைந்தோர்—இன்று ஒரே தலைமைகொண்ட ஒரே அமைப்பாக செயல்படும்காலம் முகிழ்த்தது தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமைக்கு ஓர் பெரிய வெற்றியன்றோ?

கூட்டணியின் புதிய அமைப்புவிதிகள், யாரோ ஒருசிலர் கூடி உருவாக்கி திணித்த ஒன்று அல்ல; தமிழ் ஈழத்தின்பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்தோர் ஒன்றுகக்கூடி ஒவ்வொரு விதியாக அலசி ஆராய்ந்து வேண்டிய திருத்தங்களுடன் அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!

திருக்கோவில்—தம்பிலுவிலிருந்து இயக்கத்தின் மிகப்பழைய தொண்டர் இந்தாதுரை—அக்கரைப்பற்றிலிருந்து சிவஞானச்செல்வம் குருக்கள்—கல்முனையிலிருந்து டாக்டர் உதுமான் லெப்பை, வேல்முருகு, பொ. வி. கந்தையா—பட்டிருப்பிலிருந்து முத்துப்பிள்ளை—மட்டக்களப்பிலிருந்து காசி ஆனந்தன், சாம்தம்பிமுத்து, கலா தம்பிமுத்து, இரா. அம்பலவாணர், வ. பாலசிங்கம்,—கல்குடாத்தொகுதியிலிருந்து சம்பந்தமூர்த்தி, பத்மநாதன், கோவிந்தசாமி,—கொழும்பிலிருந்து ஈழவேந்தன். ஆ. ரகுபதிபாலசிறீதரன்,—புத்தளத்திலிருந்து டாக்டர் இல்யாஸ்—வவுனியாவிலிருந்து இராசநாயகம்—மன்னாரிலிருந்து சூசைதாசன், கைலாயபிள்ளை, சௌந்தரநாயகம்—மூதூரிலிருந்து ரேச் டீவாஸ்—முல்லைத்தீவிலிருந்து செல்லத்தம்பு பா. உ. —திருகோணமலையிலிருந்து இரா. சம்பந்தர்—இப்படி பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளாக வந்திருந்தோர் பொதுக்குழுவில் மனம்விட்டு விவாதித்து இயக்கத்தின் புதிய அமைப்பு விதிகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!

இலட்சியத்தால் பின்னிப்பிணைந்து—இயக்கத்தால் ஒன்றுபட்டவர்களை—ஒரே இடத்தில் சந்தித்து மனம்விட்டுப் பேசும் போது ஏற்படுகின்ற மகிழ்வும் உள்ள நிறைவும் தனியானது—அலாதியானது; இதனால் தான், 'நாமெல்லாம் ஓர் குடும்பம்' என்கிற உணர்வே உண்டாகிறது!

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிங்கள வெறியர்களினால் காது கடிக்கப்பட்ட விழுப்புண் ஏந்திய தாமரைக்குளம் செல்லையா அவர்கள், இன்றும்கூட, அதேஆர்வமுடன் பொதுக்குழுவில் கலந்து கொண்டதைப்பார்த்தபோது—நமது இயக்கத்தின் நீண்ட பாரம்பரியம்—நீண்ட வரலாறு நினைவுக்கு வந்து எழுச்சியை ஏற்படுத்தியது.

தாமரைக்குளம் செல்லையா போன்று இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விடுதலை இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு இன்னல்கள் பலவற்றை ஏற்றுக் கொண்டு இலட்சியத்தை வளர்த்திட்ட இயக்கத்தின் ஆரம்பகாலப் பழம் பெரும் தொண்டர்கள் சிலரோ பலரோ, ஆங்காங்கே சில பல மன உழைச்சல்களுடன் கூட்டணியின் புதிய அமைப்பில் இடம் பெறாமல்—உள்ளம் பொருமியபடி இருப்பதும் நான் அறிவேன்!

அப்படி அவர்கள் யாரும் ஒதுங்கிவிடக் கூடாது; இலட்சியத்தில் ஊறி தொல்லைகள் பல ஏற்று இயக்கத்தை கட்டியெழுப்பிய ஆரம்பகாலதொண்டர்கள் எவராவது ஒதுங்கியிருப்பதோ — விலகியிருப்பதோ — அவர்கள் இத்தனை காலமும் செய்த பணியையே அவமாக்கி விடும்! உண்மையான இலட்சியவாதிகளும், தொண்டர்களும் ஒதுங்கியிருப்பார்களானால், சுயநலவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் கூட்டணிக்குள் பெருகி விடுவார்கள்!

இரத்தம் வியர்வை, கண்ணீர், சிந்தி, பலரது தியாகத்தினால் கட்டியெழுப்பப்பட்ட இந்த இயக்கம் பாழடைந்து போவதை இயக்கத்தின் மீது பற்றுக் கொண்ட எந்த ஒரு உண்மைத் தொண்டனும் மனம் சகிக்கமாட்டான்!

எனவே இயக்கத்தின் உண்மைத் தொண்டர்கள் — இயக்கம் நெறி தவறுது—பாதையை விட்டு விலகாது விடுதலை நோக்கிப் பயணத்தை தொடரவேண்டுமென்பதிலே அக்கறை கொண்டவர்கள்—தனிப்பட்ட பிரச்சினைகளை பெரிதாக்காது — இயக்கக் கிளைகளில் பொறுப்பான பதவிகளை ஏற்றிட வேண்டும். விடுதலை இயக்கத்தில் பணியாற்றிட வெற்றிலை வைத்து அழைத்திட வேண்டும் என்று யாரும் கருதிடக் கூடாது.

நண்பா, இயக்கத்துக்கு இப்போதுதான் ஒரு கட்டுக்கோப்பான யாப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த யாப்பில் இன்னும் பல திருத்தங்களை—மாற்றங்களை— காலப்போக்கில் செய்யவேண்டிவரலாம். எனவேதான் யாரும் எக்காரணம்கொண்டும் இயக்கத்தை விட்டு ஒதுங்கியிராது—இந்த அமைப்புக்குள் இணைந்து பணியாற்றிட முன் வரவேண்டும்!


கூட்டணியில் இணைவது—உத்தியோகங்களுக்கும், சலுகைகளுக்குமாக அல்ல—விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்றிட— விடுதலைப் பணியாற்றிட—என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திட வேண்டும்! கூட்டணியில் இணைவதால் சலுகைகள் எதுவும் பெற முடியாது. என்ற நிலைவரும்போது "அற்றகுளத்தில்—அறுநீர்ப் பறவைபோல்" சலுகைகளுக்காக கூட்டணிக் கூடாரத்தில் இன்று ஒட்டியிருக்கும் வௌவால்கள் பறந்துவிடும்! உண்மையான இலட்சியவாதிகளே இங்கு இருப்பார்கள்!

கூட்டணித்தொண்டர்கள் தியாக நெருப்பில் நடக்க வேண்டிய அந்தக்காலம் மிகவிரைவில் வந்து கொண்டிருக்கிறது. கோப்பாயில் வைகாசி 12, 13, 14ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்ற கூட்டணியின் இரண்டாவது தேசியமாநாடு இன்று இயக்கத்தை மூடியிருக்கும் அயர்வையும், தேக்கநிலையையும்போக்கி எழுச்சியை ஏற்படுத்தவிருக்கிறது; விடுதலை முரசு மீண்டும் முழங்கவிருக்கிறது; அதற்குமுன் இயக்கப்பாசறைகளை ஒழுங்காக அமைத்து முடித்திடுவது ஆங்காங்குள்ள கூட்டணி அமைப்பாளர்களின்—கூட்டணித் தொண்டர்களின் கடமையாகும்.

—உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# தங்கத்துரை கைது!



மூதூர்—கிளிவெட்டியில்ஏற்பட்ட ஒரு கலவரத்தைத் தொடர்ந்து மூதூர் முன்னாள் பா. உ திரு. அ. தங்கத்துரை அவர்கள் பொலிசாரினால்கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் தறுவாயில் திரு, தங்கத்துரையை பிணையில் விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளில் திருகோணமலைப் பா. உ. திரு. இரா. சம்பந்தர் ஈடுபட்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி, கே. பரமேஸ்வரி,
கரவெட்டி:

கே: தேர்தல் முடிந்தும் தமிழ் ஈழம் கிடைக்கவில்லையே!

ப: தேர்தல் மூலம் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று உங்களுக்கு யார் சொன்னார்கள்?

ஃ

சிற். ஸ்ரீஜீவா,
கேணியடி,
கொக்குவில்.

கே: தன்னையே மறந்து பதவிக்காகவும் பணத்துக்காகவும் வாழும் தமிழனைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ் சமுதாயத்தின் குருவிச்சைகள்!

கே: மற்றவர்களுக்கு வால்பிடித்து வாழும் குணம் தமிழனுக்கு எப்போது போகும்!

ப: வாள்பிடிக்கும் அளவுக்கு கையிலும் நெஞ்சிலும் தைரியம் வரும்போது!

கே: 77ல் சிந்தித்த தமிழன் 78ல் சிந்திக்கிறானா?

ப: 78ல் இன்னும் உதைவிழவில்லையே!

ஃ

ம. கௌரிசங்கர்,
துன்னாலை.

கே: மேகங்கள் கூடுவது மழைபொழிய; காகங்கள் கூடுவது பகிர்ந்துண்ண; தமிழர்கள் கூடுவது...?

ப: தலைவர்களின் மேடைப்பேச்சைக் கேட்டு கைதட்டிட!

ஃ

பா. பாலேஸ்வரி,
பிள்ளையார்கோவில்வீதி,
நல்லூர்.

கே: தற்போதுதரப்படுத்தல் நீக்கத்தையடுத்து ஏற்படவிருந்த கலவரத்துக்கு பிக்குகள்தான் முக்கியகாரணம் என்கிறார்களே!

ப: ஆம், அவர்கள்தாம் இத்தீவை பிரித்(து) ஓதுகிறவர்கள்!

கே: முன்பெல்லாம் கொழும்பில் சுதந்திரனை கடையில் வாங்கவோ, கையில் கொண்டுசெல்லவோ பயமாக இருந்தது. ஏனெனில் பொலிசார் சுதந்திரன் கொண்டுசெல்பவர்களை தமது எதிரியாய் நினைத்தனர். தற்போது நிலைமை எப்படி?

ப: அநீதியிலும் அக்கிரமத்திலும் ஈடுபடுவோர்க்கு சுதந்திரன் என்றால் எப்போதும் கிலியெடுப்பது வழக்கம்தான். ஆனால் ஒரு செய்தி தெரியுமோ? சுமார் ஒரு டசின் சுதந்திரனை வாரத்துக்கு இரு தடவை விசேட பொலிஸ் பிரிவினர் காசு கொடுத்து வாங்குகிறார்களாம்!

ஃ

இ. காண்டீபன்,
உரும்பிராய் வடக்கு.

கே: கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களைப்பற்றி சில வரிகள் கூறுவீர்களா?

ப: 'சுதந்திரத் தமிழ் ஈழம்' குறித்து மிகவும்தெளிவாகவும், முரண்பாடின்றியும், அழுத்தந்திருத்தமாகவும் எளிமையானவார்த்தைகளில் கொள்கைவிளக்கம் அளிக்கும் திறமை பெற்றவர். அமைதி, அடக்கம், ஆழமான அறிவு, சிந்தனைத் திறன்மிக்க இவர் சிலு சிலுப்பிலன்றி பணியாரத்திலேயே குறிக்கோளாக இருப்பவர். இயக்கத்தின் நடவடிக்கைகளில் இவர் இன்னும் சற்றுத் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்பதே அனைவரது ஆசையுமாகும்.

ஃ

ராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: சன்சோனி ஆணைக்குழு முன் வைக்கப்படும் சாட்சியங்களை சுதந்திரனில் முழுமையாக ஏன் வெளியிடுவதில்லை?

ப: தமிழ் தினசரிகள் அனைத்தும் அவற்றைப் பக்கம் பக்கமாக இப்போது வெளியிடுகின்றன; அவற்றை திரும்பவும் சுதந்திரனில் வெளியிடுவதால் பயன் என்ன? நாளேடுகள் இருட்டடிப்பு செய்யும் பகுதிகளை சுதந்திரனில் வெளியிடுவோம்!

ஃ

வீ. வனராசா,
கோட்டை வீதி,
சிலாபம்.

கே: எங்கள் தலைவர் அமிர்தலிங்கம் அரசுக்கு இன்னும் ஏன் அவகாசம் கொடுக்கிறார்?

ப: கொக்கு தூங்குவது போல பாசாங்கு செய்தபடி இருக்கும்; சரியான சமயத்தில் மீனைக் கொத்தும். அதுபோல அமிர்தலிங்கம் அரசுக்கு அவகாசம் கொடுப்பது போல—, பாவனைசெய்துகொண்டு சரியான தருணத்துக்கு காத்திருக்கிறார்!

கே: பாலஸ்தீனகெரில்லா இயக்கம் போல இங்கு தமிழ் ஈழத்திலும் அமைந்தால் என்ன?

ப: எதிர்காலத்தில் என்ன நடக்குமோ யார் கண்டார்கள்?

ஃ

எஸ். எம். இளங்கோ,
குருமண்வெளி.

கே: தமிழ்ஈழம்அமைத்தவுடன் காசி ஆனந்தனுக்கு என்ன பொறுப்புகிடைக்கும்?

ப: தமிழ் ஈழத்தின் அரசவைக் கவிஞர் அவர் என்பதுதான் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவு ஆயிற்றே!

ஃ

சீ. ரவிந்திரன்,
மட்டுநகர்.

கே: தந்தைசெல்வா நினைவுநாள் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக தமிழ் நாட்டிலிருந்துவரும் பெரியார்கள் மட்டுநகரில் நடைபெறும் கூட்டங்களிலும் கலந்துகொள்வார்களா?

ப: [illegible] காவற்குழு அதற்கு ஏற்பாடு செய்யும் என்று நினைக்கிறேன்:

ஃ

சி. சிவஞானசுந்தரம்,
ஏழாலை மேற்கு.

கே: தற்போது தமிழ்ஈழ அரசியல் நிலை எப்படி இருக்கிறது?

ப: "தொகுதிக்கு ஆயிரம்பேர்" வேலைக்கு அடிபடும் நிலையிலிருக்கிறது! வெளியே பேசாதீர்கள்—வெட்கக்கேடு!

கே: செந்தமிழர் இயக்கம் மிக விரைவில் கூட்டணியை விழுங்கிவிடும் என்று சிலர் கூறுகிறார்கள்—தங்கள் கருத்தென்ன?

ப: யானை சேற்றுள் சிக்கிவிடும்போது பூனையும் ஒரு உதை உதைக்கும என்று கூறுவார்கள்—கூட்டணி ஒரு யானை; அது சேற்றுக்குள் சிக்காதவரை எந்தப்பூனையும் அதை நெருங்கமுடியாது!

கே: தமிழ்ஈழ இலட்சியத்துக்கும் சிறீலங்காவின் இ. போ. ச. நடத்துனர் உத்தியோகத்துக்கும்ஒரேநேரத்தில் ஆசைப்படுவது மீசையோடு கூழ் குடிக்கப்போய்-கூழும் வீணாய் மீசையும் பழுதாய்ப் போனதுபோல இல்லையா?

ப: உண்மைதான்: ஆனாலும் ஒரு இயக்கம் தங்குமடங்களில் அமரும்போது இப்படியான நிலைகள் ஏற்படவே செய்யும்!

ஃ

கே. கே. தங்கமயில்,
மருதங்கேணி வடக்கு.

கே: அரசாங்கத் தகவல் திரைப்படங்களில் ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளை படம்பிடித்துக் காட்டுகிறார்கள்; இதுபோல் எதிர்க்கட்சித்தலைவர் பங்குபற்றும் வைபவங்களை காட்டுவதில்லையே— இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: ஒரு தமிழன் எதிர்க்கட்சித் தலைவரானதையே பொறுத்துக்கொள்ள முடியாமல் வயிறு எரிகிறவர்கள் அவரைப் படத்திலா காட்டுவார்கள்? ஜே. ஆரின் ஜனநாயகம் இதுதான் என்பதை புரிந்துகொள்ளுங்கள்!

கே: தமிழ்ஈழம் கிடைத்தால் பருத்தித்துறைதே.பே. உறுப்பினர் துரைரத்தினத்துக்கு என்ன மந்திரிபதவி வழங்கலாம்?

ப: பொருளாதாரம்—திட்டமிடல் அமைச்சர்!

ஃ

ஐ. ஆனந்தராசா,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

கே: ஜே. ஆர். இனியும் தமிழரின் பிரச்சினைகளைத்தீர்ப்பார் என்று நம்புகிறீர்களா?

ப: நம்பநட; நம்பிநடவாதே என்ற பழமொழியை நினைவூட்டுகிறேன்.

கே: தந்தைசெல்வா கண்டகனவு நனவாக நாம் என்ன செய்ய வேண்டும்,

ப: தந்தைசெல்வாபோல விசுவாசத்துடன் தமிழ்ஈழத்தின் விடுதலைக்கு உழைக்க வேண்டும்:

ஃ

"வேங்கடமைந்தன்"
யாழ்ப்பாணம்.

கே: தமிழாராய்ச்சி மகாநாட்டின் சொற்பொழிவுகளை சுதந்திரன் இதழ்மூலம் ஒவ்வொன்றாக வெளியிட்டால் என்ன?

ப: எந்தத்தமிழாராய்ச்சி மாநாடுபற்றி சொல்கிறீர்கள்?

கே: சுப்பலோட்டிய தமிழனின் தியாக உணர்வும் செயற்பாடும் தமிழ்த்தலைவர்களில் யாருக்கு உண்டு?

ப: கப்பலோட்டிய தமிழர் வா. உ. சிக்குவந்தது போல துன்பம் வரும்போது தான் தெரியும்!

ஃ

க. கிரிதரன்,
கம்டன் வீதி,
வெள்ளவத்தை:

கே: எமக்கென்று தனி உடையும் தனிநாகரீகமும் இருக்க இப்போது தமிழ்ப் பெண்கள்சிலர் எங்கெங்கோ உடுக்கவேண்டிய ஆடைகளையெல்லாம் கோவிலுக்கு போட்டுக் கொண்டு வந்து தமது அங்கங்களைக் காட்டுகிறார்களே இவர்களைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: உங்களைப் போன்றவர்கள் அவர்களதுஅங்கங்களைப் பார்ப்பதற்கு கோவிலுக்கு வருவதால்தான் அவ்வாறு அவர்கள் ஆடைஅணிகிறார்கள். நீங்கள் பார்க்காவிட்டால் அவர்களும் அவ்வாறு ஆடைஅணிய மாட்டார்கள்

ஃ

அ. டொமினிக்,
கொழும்பு-12.

கே: சுதந்திரன் பத்திரிகை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

ப: 1-6-1947ல்!

ஃ

வ. ஞானேஸ்வரன்,
சுளிபுரம்.

கே: தமிழினத்தின்தலைவரான "அமிர்தலிங்கம்" அவர்கள் ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று எமது விடுதலையை கூடியவிரைவில் பெற நடவடிக்கை எடுத்தால் என்ன?

ப: அத்தகைய புனித இலட்சியயாத்திரை ஒன்றை அவர்விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறார்!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## புத்தாண்டு உனக்கு போர்க்களமாகுக!

பெருமையால் தமிழினம் விங்குக! எங்கும்
அடிமையாம் சின்னங்கள் நீங்குக!
ஒருமையில் அமிழ்தினம் ஓங்குக! புவி
எங்கணும் தமிழ்சாதி வெல்லுக!
பெருமைகொள் சமரசம் தேங்குக! ஞான
பெட்டகத் தமிழ்மொழி ஆழுக!
கருங்குயில் இசைத்தமிழ் கூவுக! கன்னிக்
காதலி தமிழ்நங்கை சிறக்குக!

புத்தொளிப் புத்தாண்டு மணக்குக! எங்கள்
பொல்லாப்பு ஈழத்தில் கலேகுக!
சொத்தைகள்சோடைகள் அகலுக! தமிழ்
செந்தேனை சிந்தையில் தேக்குக!
சத்தான தமிழ்மொழி முழங்குக! மண்ணில்
சஞ்சலம் சங்கடம் அல்லுக!
பூத்திடும் புத்தாண்டு இனிக்குக! புகழ்
பாடிட முரசொலி ஊதுக!

தமிழ்ஈழ விடுதலை ஊறுக! தினம்
தரித்திர 'மேகநோய்' நீக்குக;
அமிழ்தினு மொழியினர் சேருக! தங்க
மண்ணுக்கு விடுதலை விரும்புக!
மதுவிரிந்தொழுகிடும் மாமலர் மணக்குக! துயர்
மண்டிடும் கொடுமைகள் அகலுக!
புத்தாண்டுப் பொற்கோழி கூவுக! தமிழா
போர்களத் தமிழ்வெறி கொள்ளுக!

செழுந்தமிழ் துன்பங்கள் மாழுக! தமிழ்
வேதனை நீங்கச் சாடுக!
ஆளும் சிங்களம் பாடையில்ஏறுக! அடா
சாதி 'விட்டிலை' விளக்கில் கொழுத்துக!
கூழுக்குக் கெஞ்சிடும் அவலம்நீங்குக! கொடிய
விலங்கொடித்திடும் திண்மை பெறுக!
பாழும் பேதங்கள் அறவேநீங்குக! தமிழா
புத்தாண்டு உனக்குப் போர்க்களமாகுக!

—ஆரையம்பதி ஆ. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சன்சோனி ஆணைக்குழு விசாரணை

# யூ. என். பி. ஆட்சி கண்டு பூரித்த தமிழர்

# படுகொலை! கடையும் சூறை!

## தமிழரின் அடுத்த சந்ததி அழியட்டும்!

"மாத்தறையில் என் கணவர் கடை வைத்திருந்தார். ஐந்துபிள்ளைகளும் நானும் கணவருடன் அங்கு இருந்தோம். ஆகஸ்ட் 19ம் திகதி காலை 10 மணிக்கு கடைக்குள் அத்துமீறிப்பிரவேசித்த சிங்களவர்கள் என்னையும் கணவரையும் கடுமையாகத் தாக்கினர். என் குழந்தைகளையும் துடிதுடிக்கத் தாக்கினர். ஒருவன் ஐந்து குழந்தைகளையும் இழுத்து ஒன்றாகச் சேர்த்துக்கட்டி அவர்கள் மீது எதையோ ஊற்றி தீவைத்தான். 'தமிழரின் அடுத்த சந்ததி தொலைந்து போகட்டும்' என்று கூறியவாறு குழந்தைகளுக்குத் தீயிட்டார்கள். பத்து நாட்களுக்குப்பின் யாழ்ப்பாணம் வந்தே எரிந்த குழந்தைகளுக்குசிகிச்சைசெய்யமுடிந்தது மாத்தறை மருத்துவமனையில் சிகிச்சை செய்ய எவரும் முன்வரவில்லை. என் கணவருக்குஏற்பட்ட அதிர்ச்சியால், மூளை கலங்கி விட்டது"

—திருமதி வசந்தாதேவி கதிரவேற்பிள்ளை

* *

## தமிழரைக் கொல்லுவோம்

"குண்டசாலை விவசாயப் பாடசாலைத் தமிழ் மாணவர்களை சிங்களக் குண்டர்கள் தாக்கினார்கள். தமிழ் மாணவர்களுக்கு சிகரெட்டால் சுட்டனர். சிங்களவரை யாழ்ப்பாணத்தில் கொல்லுகிறார்கள். அதனால் தமிழரை தாம் தாக்குவதாக அவர்கள் கூறினார்கள். லொறி ஒன்று வந்தது; அதிலே "தமிழர்"களைக் கொல்லுவோம்" என எழுதப்பட்டிருந்தது ஏ.எஸ். சங்கரப்பிள்ளை கடையும், மகா இலுப்பைக்குள தமிழர் கடைகளும் எரிக்கப்பட்டன. அதனால் தாங்களும் தாக்குதல் நடத்தவேண்டும் எனக் கூறி தமிழ் மாணவர் விடுதியை தாக்கினார்கள். நாங்கள் காட்டுக்குள் ஓடித்தப்பினோம்!

—குண்டசாலை விவசாயப் பண்ணை லிகிதர் இ. பத்மநாதன்

* *

## யூ என்.பியை நம்பியவர் படுகொலை!

யூ. என். பி. வெற்றி பெற்றதும், 'தனது' அரசாங்கம் வந்து விட்டதென்றும், தமிழருக்கு இனிப்பயமில்லை என்றுப் பொலிசாரும் இராணுவத்தினரும் இனித் தமிழருக்குப் பாதுகாப்பாக இருப்பார்கள் என்றும் ஆனந்தப்பட்ட எனது கணவர் எனது நகைகளையும் அடவுவைத்து, காணியை ஈடு வைத்து, முதல் போட்டு மூன்று தலைமுறையாக அளவையில் நடத்தி வந்த எமது கடையைப் பெருப்பித்தார்— ஆனால் ஐயகோ, இனக்கலவரத்தின் போது எனது கணவர் கொல்லப்பட்டுவிட்டார் அவர் கொல்லப்பட்டதையும் மூன்றுநாட்கள் கழிந்தே அறிந்தேன். ஐந்து பிள்ளைகளும் நானும் அநாதைகளாக்கப்பட்டோம். இரண்டரை லட்சம்ரூபா நட்டமும் அடைந்தோம்.

—இக்னேசியஸ் கைம்பெண் மேரி இமைக்குலேன்

* *

## உயிரோடு கொளுத்த முயற்சி

ஆகஸ்ட் 19ம் திகதி 500 சிங்களவர்கள் வந்து அளவையில் உள்ள என் கடையை உடைத்தனர். நான் பின் பக்கத்தால் ஓடி ஒரு சிங்களக் கடைக்குள் புகுந்து கொண்டேன். அங்கிருந்து பார்த்த போது குண்டர்கள் எனது கடையையும் மற்றும் தமிழர் கடைகளையும் கொள்ளையடித்து தீவைத்தது தெரிந்தது. ஐம்பது யார் தூரத்தில் றைபிள் வைத்திருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரும் காவலர்களும் ஜீப்பில் இருந்தபடி இதைப்பார்த்துக் கொண்டு நின்றனர்; "தமிழன் ஒருவன் மெதுவாக சிங்களக் கடைக்குள் நழுவிவிட்டான். அவனைப்பிடித்துக் கொல்ல வேண்டும்" என்று சிங்களக் குண்டன் ஒருவன் கத்தினான். சிங்களக் குண்டர்கள் கையில் சிக்கிக் கொண்டேன், பிரதான வீதிக்கு என்னை இழுத்துச் சென்று லைட் கம்பத்துடன் கட்டி உயிரோடு கொழுத்த வேண்டுமென்று முடிவு செய்தனர். ஒருவர் கயிறு தேடிப் போனார். இதையெல்லாம் பொலிசாரும் இராணுவத்தினரும் பார்த்துக் கொண்டு நின்றனர். அச்சமயம் அந்த வழியே வந்த நல்லவரான சிங்களவர் ஒருவரால் உயிராபத்திலிருந்து தப்பினேன்.

—பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை ராயப்பு

* *

## வைக்கோலில் போட்டு எண்ணையூற்றி எரித்தனர்!

"அளவைச் சந்தியில் கலவரம் நடந்தது; கொழும்பிலிருந்து வாழைப் பழம் வாங்கசந்தைக்கு வந்திருந்த தமிழர்களை மீன்வியாபாரிகள் தாக்கினர். நாம் (தமிழர்கள்) மறைந்திருந்த சிங்களவீடொன்றுக்குள் புகுந்த சிங்களக் குண்டர்கள் ஒவ்வோர் அறையாகத்தேடி தமிழர்களை இழுத்து வந்து அடித்தார்கள். பின் அவர்களை இழுத்துவந்து ஓரிடத்தில் போட்டு, அவர்கள் மீது வைக்கோல்பரவி தேங்காய் எண்ணையூற்றி தீவைத்தனர். இதில் என் மாமா இக்னேசியஸ் எரிந்து இறந்து கிடந்தார். ராஜகோபால் என்பவரும் காயமடைந்து பின் மரணமானார். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அளவை வாசிகள் வெளியே பார்த்துக்கொண்டு நின்றனர். எல்லாத் தமிழ்க்கடைகளும் எரிந்துகிடந்தன; துல்இரிய ஆலைத் தொழிலாளர்கள் சிலரும் இதிலே ஈடுபட்டிருந்தனர்.

—இம்மானுவல் சகாயநாதன்

* *

## பறைத்தமிழனுக்கு என்னடா டாக்டர் வேலை?

"குண்டர்களிடமிருந்து பாதுகாப்புக்கருதி அனுராதபுரம் காட்டுக்குள் டாக்டராகிய எனது கணவரும் நானும் பிள்ளையும் ஆடாமல் அசையாமல் பயத்துடன் படுத்திருந்தோம்.

## சிங்களவர்கள் கல்லெறி!

"நானும் என் தந்தையும் கல்கமுவையில் ஒரு கடை நடத்திவந்தோம். கலவர நேரத்தில் என் கடை தாக்கப்பட்டபோது பின்பக்கத்தில் போய் ஒழித்திருந்தேன்; என் கடைப்பக்கம் ஒரு இராணுவ ஜீப் வந்ததைக் கண்டேன். இராணுவத்தினர் கொள்ளையர்களிடம் "கடையை உடைத்துவேலையில்லை; ஒரு தமிழனையாவது கொல்லவேண்டும்" என்று கூறினர். நான் பயந்து பொலீஸ் நிலையம்நோக்கி ஓடியபோது, வழியில்நின்ற சிங்களவர்கள் "தமிழர்கள் ஓடுகிறார்கள்" என்றுகூறியபடி கல்லால் எறிந்தனர்!"

—கு. சுந்தரேஸ்வரன்,

டிக்கொண்டு இருந்தனர் சிங்கள முதலாளியிடம் போய்க் கடையை தரும்படி கேட்டேன். "தமிழருக்கு கடையைத்தரமாட்டேன்; பிறகும் இப்படி நடக்கலாம்" என்று கூறி மறுத்துவிட்டார். அவரிடம் ஒரு காணிவாங்கி வீடு கட்டியிருந்தேன். நான் மாகோ போனபோது, அவரின்மகன் அவ்வீட்டில் குடியேறியிருந்தார். "உனக்கு வீடு இல்லை, போ," என்று கூறிவிட்டார். மாகோவிலுள்ள 16 தமிழர் கடைகளும் எரிக்கப்பட்டு விட்டன."

—கா. வ. கணேசராசா.

* *

## சிங்களவர்கள் பார்த்துச் சிரித்தனர்

"குண்டர்கள் என்னிடம் "நீ ஒரு தமிழனா" என்று

# தமிழரைக் காப்பாற்ற உறுதிதந்த

# யூ. என். பி. பா. உ. ஓடி ஒழித்தார்'

அப்போது ஊரடங்குச்சட்ட அறிவிப்புவரவே பொலிசாருக்குப் பயந்த சிங்களக் காடையர்கள் காட்டுக்குள் ஓடிவந்தபோது எம்மீது இடறிவிழுந்தனர். எம்மைக் கண்டதும் எம்மைப்பிடித்துக்கொண்டனர். கல்லு முள்ளுகள் ஊடாக என்னையும் கணவரையும் கொறகொற வென்று காட்டுக்குள் இழுத்துச் சென்றனர். என்னிடமிருந்து பிள்ளையைப் பறித்த ஒரு குண்டன், எங்களைக் கிணற்றுக்குள்போட முடிவுசெய்து, முதலில் பிள்ளையை போடுவதற்கு கிணற்று விளிம்புவரை கொண்டு சென்றுவிட்டான். நான் அழுதுகுழறி எனது குழந்தையைப் பறித்துவிட்டேன். காட்டில் எங்களைத் தாக்கிய

## அயலவர்களே தாக்கினர்!

"அனுராதபுரம் 'வட்டுவகுளம்' என்று அழைக்கப்படும் எமது கிராமத்தில் 25 தமிழ்க் குடும்பங்கள் உண்டு. அந்த 25 தமிழர் வீடுகளும் எரிக்கப்பட்டன. குண்டர்கள் ஒருநாள்இரவு 8மணி தொடக்கம் மறுநாள் விடியும்வரை சுற்றிவளைத்துத்தாக்குதல் நடத்தினார்கள். எங்கள் வீட்டுக்கு அயலிலுள்ள சிங்கள இளைஞர்கள்தான் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் எல்லோரையும் எனக்கு நன்கு தெரியும். அதுவரை காலமும் எம்முடன் அன்னியோன்யமாக பழகிவந்தவர்கள். சுகதுக்கங்களில் பங்கு பற்றியவர்கள். அவர்கள் தான் தாக்குதலில் ஈடுபட்டனர். இப்போது கிளிநொச்சியில் வசிக்கிறோம்."

—செல்வி சிதாலட்சுமி முத்தையா;

கேட்டனர். நான்பதில் சொல்லவில்லை. ஏனெனில் அங்கு உள்ளூர் சிங்களவர்களும் நின்று வேடிக்கைபார்த்தனர். குண்டர்கள் அடித்தனர்; நான் விழுந்துவிட்டேன். காயம் ஏற்பட்டு இரத்தம் சேட்டில் வழிந்தோடியது. மெதுவாக எழுந்தேன். என்ன எழும்புகிறாயா என்று கேட்டு மீண்டும் அடித்தனர். நான் மீண்டும் விழுந்துவிட்டேன், இதைப் பார்த்து உள்ளூர் சிங்களவர்கள் சிரித்துக்கொண்டு நின்றனர். "கும்பிடுகிறேன் அடிக்க வேண்டாம்" என்று நான் கெஞ்சியபோது, "கும்பிட வேண்டாம், உங்கள் தமிழர்கள் எங்கள் சிங்களமாணவிகளைத் தாக்கிவிட்டனர்" என்றார்கள். மற்றத்தமிழர்களுக்கும் அடித்தனர். என் மனைவி வேலிக்குமேலால் குழந்தையை எறிந்துவிட்டு, வேலியால் ஏறிப்பாய்ந்து தப்பிவந்தாள்.

—கஹட்டகஸ்கன உதவி அஞ்சல் அதிபர் ஆ. முருகேசு.

# சேகுவேரா இளைஞரும்

# செந்தமிழரை தாக்கினர்!

குண்டர்கள் "பறைத்தமிழனுக்கு என்னடா டாக்டர் வேலை?" என்று கேட்டனர். இப்படிக் கேட்டவர்களில் அனேகர் என் கணவரால் சிகிச்சையளித்து முன்பு காப்பாற்றப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எமக்கு உதவிட முன்வந்த சிங்கள வீட்டாரிடம், தம்மைக் காட்டிக்கொடுத்தால் அவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்று சிங்களக்குண்டர்கள் பயமுறுத்தினார்களாம். தமிழருக்கு பாதுகாப்பு அளித்து பட்டபாடு போதும், இனி கரைச்சல் தர வேண்டாம் என்று சிங்கள வீட்டுக்காரர் சொன்னாராம்!

—திருமதி புஷ்பராணி [illegible]நாதன்.

* *

## உனக்கு வீடு இல்லை—போ!

"கலவரத்தின் பின்னர் நான் மாகோவிற்கு சென்றேன். என்கடை எரிந்தநிலையில் இருந்தது உள்ளூர் இளைஞர்கள் அங்கு விளையா

* *

## யூ. என். பி. பா. உ.வை காணவில்லை!

"கடந்த தேர்தலில் நான் யூ. என். பி. மேடைகளில்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழ் தொழிற் சங்கங்களுக்கு ஓர் எச்சரிக்கை!

தமிழ் ஈழ மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்கும் ஏனைய அபிலாஷைகளுக்கும் போராடும் ஒரேயொரு தனிப்பெரும் இயக்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று விளங்கி வருகிறது.

தமிழ் ஈழ மக்களின் பல்வேறு பிரிவினரும் அங்கம் வகிக்கும் தேசிய விடுதலை இயக்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

தமிழ்த் தொழிலாளர்கள்—
தமிழ் விவசாயிகள்—
தமிழ் ஆசிரியர்கள்—
டாக்டர்கள்—
பொறியிலாளர்கள்—
தமிழ் அரசாங்க ஊழியர்கள்—
இளைஞர்கள்—மாணவர்கள்—மகளிர்

இவ்வாறு பல்துறையினரும் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு தேசிய இயக்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணி மிளிருகிறது. பதினெட்டுக்கு மேற்பட்ட தமிழ்தொழிற் சங்கங்கள் கூட்டணியுடன் இன்று இணைந்து செயல்படுகின்றன.

தமிழ் ஈழத்தந்தையும்—தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றத்துக்கு காரணமாக இருந்தவருமான தந்தைசெல்வா அவர்களின் அரசியல்வாழ்வில் ஏற்பட்ட மாபெரும் திருப்பம் கூட தமிழ் தொழிலாளர்களின் உரிமைப் பிரச்சினையிலிருந்து ஏற்பட்டதென்பது வரலாறு கூறும் உண்மை!

தமிழ் ஈழ விடுதலையில் நாட்டங்கொண்ட சிறு தமிழ் முதலாளிகளும் கூட்டணியை ஆதரித்தாலும் கூட, அவர்களுக்காக கூட்டணி தனது சமதர்ம லட்சியத்தை என்றும் விட்டுக் கொடுத்தது இல்லை; இனவிடுதலையையும் சோசலிசத்தையுமே தனது இருகண்களாகக்கொண்டு கூட்டணி தன்னுடைய இலட்சிய யாத்திரையை மேற்கொண்டுள்ளது.

சாதி அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கும் தமிழ் சகோதரர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் எந்த ஒரு இடதுசாரி இயக்கமும் இதுவரை நினைத்துக்கூட பார்த்திராத அளவுக்கு—சாதித் தடிப்பு நிறைந்ததாக கருதப்பட்ட ஒரு தொகுதியில்—சிறுபான்மை வகுப்பில் பிறந்த ஒரு தமிழ் அறிஞரை நிறுத்தி பெரும் வெற்றியீட்டி தமிழ் சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திக் காட்டியதும் தமிழர் விடுதலைக் கூட்டணியே!

மதசார்பற்ற கொள்கை!

மனிதனை மனிதன் சுரண்டாது, தொழிலின் கௌரவத்தை ஏற்று, சோசலிச திட்டமிடலின் அடிப்படையில் ஓர் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல்!

உயர்வு, தாழ்வு வேற்றுமை கற்பிக்கும் சாதி அமைப்பினை முற்றாக இல்லாதொழித்து சாதி இல்லாத சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதல்!

என்பனபோன்ற திட்டவட்டமான கொள்கைகளின் மீது—ஒரு சுதந்திர தமிழ் ஈழ அரசை உருவாக்குவதற்கு கூட்டணி உறுதி பூண்டுள்ளது.

கூட்டணியின் உறுதியான இக் கொள்கைகளின் காரணமாக—தமிழ் ஈழமக்கள் அனைவரும் சாதிவேற்றுமை மறந்து—வர்க்க வேறுபாடுகளை மறந்து—பிரதேச, மத வேறுபாடுகளை மறந்து—தமிழ்ஈழ் விடுதலைக்காக இன்று ஒன்றுபட்டு நம்பிக்கையுடன் உழைக்கிறார்கள்!

கடந்த 1977 பொதுத்தேர்தலின்போது தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வாக்களித்தவர்களில் கணிசமானவர்கள் தமிழ் பேசும் தொழிலாளர்களும், விவசாயிகளும்தாம்! தமிழ்ஈழத் தொழிலாளவர்க்கத்தினதும், விவசாயிகளினதும் நம்பிக்கைக்குரிய ஒரே அமைப்பாக விளங்குவது தமிழர் விடுதலைக்கூட்டணியேதான்!

**தமிழர்விடுதலைக்கூட்டணியை ஏதோ ஒரு முதலாளித்துவ அமைப்புப்போலக் காட்டி—தமிழ்ஈழத்தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்த தனியானவேறு ஓர் அமைப்பு வேண்டும் என்று கூறி—தமிழர் விடுதலைக்கூட்டணியிலிருந்து தமிழ் தொழிலாள வர்க்கத்தை தனியே பிரித்தெடுத்திட நடைபெறும் சூழ்ச்சிகளை தமிழ் தொழிற்சங்கங்கள் சரியாக இனங்கண்டு முறியடித்திடவேண்டும்! ஒன்றுபட்ட தமிழ் சமுதாயம்—மீண்டும் எந்த ஒரு கட்டத்திலும் பிளவுபடவோ — திசைமாறிச் செல்லவோ யாரும் அனுமதிக்கமுடியாது!**

# எந்த நிலையையும் சந்திக்க இயக்க அமைப்புக்களை

## தயார் நிலையில் வைத்திருப்போம்!

(சிங்கள) ஸ்ரீலங்கா-தமிழ் ஈழ நாடுகளுக்கு இடைப்பட்ட பிரச்சினை, பிரித்தானிய காலனி ஆட்சியாளர்களால் தமது நிர்வாக வசதிக்காக தன்னிச்சையாக கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் செய்து கொள்ளப்பட்ட வலுக்கட்டாயமான இணைப்பினால் சம்பவித்த ஒரு வரலாற்றுப் பிரச்சினையாகும். வரலாற்றில் அதற்குமுன், எக்காலத்திலும் (சிங்கள) ஸ்ரீலங்காவின் வேண்டாத ஓர் இணைப்பாக தமிழ் ஈழம் இருந்தது கிடையாது.

இலங்கைத்தீவு இரு வேறு தேசிய இனங்களையுடைய இரு வேறு நாடுகளாகவே இருந்திருப்பதாக வரலாறு வலியுறுத்துகிறது. அமரர் மு. திருச்செல்வம் அவர்கள் முன்வைத்த மேற்படி சட்ட வாதம் நீதியரசர்களால்தானும் மறுத்துரைக்கப்படாமை பதிவில் உள்ளது, றயல் அற்பார் விசாரணைத் தீர்ப்பில். மறுக்கவோ மறைக்கவோ முடியாத வரலாற்று உண்மை இதுவாகும்.

காலாதி காலமாகவரலாற்றில் இரு வேறு நாடுகளாக இறைமையுடன் திகழ்ந்து வந்த தமிழ் ஈழத்தையும், ஸ்ரீலங்காவையும் அந்நியர்களான போத்துக்கேயர்முதன் முதலில் கைப்பற்றினார்கள். போர் முனையில் கைப்பற்றப்பட்ட மேற்படி சிங்கள ஸ்ரீலங்காவையும், தமிழ் ஈழத்தையும் போர்த்துக்கேயரும், அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தரும், பிரித்தானியரும் அவற்றின் தனித்துவம் கெடாதபடி தனித்தனியாகவே நிர்வகித்து வந்தனர். இது வரலாறு. நிர்வாக வசதியின் பொருட்டு இந்நிலை கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் மீது வலோற்காரமாக மாற்றப்பட்டது. இவ் விணைப்பைத் தமிழ் ஈழத்திலும் பார்க்க அதிகம் ஆட்சேபித்தது (சிங்கள) ஸ்ரீலங்காதான்.

(சிங்கள) ஸ்ரீலங்காவினதும், தமிழ் ஈழத்தினதும் சம்மதம் பெறப்படாது தனது நிர்வாக வசதிக்காக பிரித்தானிய அந்நிய ஏகாதிபத்தியம் ஏற்படுத்திக் கொண்ட வரலாற்றுச்சிக்கல்தான் இணைப்பு எனுமமுடிச்சு ஆகும். அதற்கும் கூட சட்ட ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் இருந்து வந்த தொடர்பு கொழும்பு நவரங்கல நாடக மண்டபத்தில் சோல்பரி அரசமைப்புத்திட்டம் தூக்கி வீசப்பட்டதுடன் முடிந்துவிட்டது. அதனைத் தொடர்ந்து அதே நாடக மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட (சிங்கள) ஸ்ரீலங்காவுக்கான புதிய அரசமைப்புத் திட்டத்தை தமிழ் ஈழம் நிராகரித்தமை தெரிந்ததே;

காங்கேசன்துறை இடைத் தேர்தலை ஏற்படுத்தி அதில் அபரிமிதமான பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் அனைத்துலகும் ஏற்கும் வகையில் அதனைத் தந்தை செல்வா சந்தேகத்துக்கு எதுவித இடமும் தராது நிறுவியுள்ளார். தொடர்ந்து வந்த தமிழர் [illegible] க்கோட்டை மாநாட்டின் தீர்மானமோ மேற்படி வரலாற்றுச் சிக்கலை அவிழ்ப்பதற்கான மாற்றாக "தமிழ் ஈழத்தை மீட்பது, புனரமைப்பது" எனத் தீர்மானித்ததுடன் நில்லாது அப்பணியை நிறைவேற்றும் வகையில் தனது அமைப்பையே தமிழ் ஈழத்தின் விடுதலை இயக்கமாக "தமிழர் விடுதலைக் கூட்டணி" எனவும் பிரகடனப்படுத்திற்று.

1977ல் நிகழ்ந்த பொதுத் தேர்தலை "தமிழர் விடுதலைக் கூட்டணி" ஒரு பொதுஜன வாக்கெடுப்பாகவே சந்தித்தது. அதற்குப் புறம்பான எந்தவொரு பிரச்சினையையும் அது தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலோ தேர்தல் பிரச்சார மேடைகளிலோ முன்வைக்கவில்லை. எனவே, 1977ல் நிகழ்ந்த பொதுத்தேர்தலை — தமிழ் ஈழ மக்கள் தாம் வெளியார் தலையீடு இன்றித் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கக்கூடிய சுயநிர்ணயஉரிமையுள்ள ஒரு தனித் தேசிய இனம் என்ற அடிப்படையில், ஐ. நா. மனித உரிமைகள் சாசனம் வலியுறுத்துகின்ற சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து — ஒரு பொதுஜன வாக்கெடுப்பாக நடத்தி தமது முடிந்த முடிவாகிய "தமிழ் ஈழத்தை மீட்பது. புனரமைப்பது" என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அறுதியிட்டு உறுதிசெய்து கொண்டார்கள்.

தற்பொழுது புரட்சிவாத இடதுசாரி இயக்கங்களும், மார்க்சிய கட்சிகளும், செந்தமிழர் கழகமும் தமிழ் மக்களுக்கு—தமிழ் ஈழத்துக்கு—சுயநிர்ணய உரிமை உண்டென்பதைக் கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டுள்ளன. தமிழ் ஈழமோ தனது சுயநிர்ணய உரிமையை ஏலவே பிரயோகித்து தனது முடிவை அனைத்து உலகிற்கும் சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் தெளிவாக அறிவித்துவிட்டது. தமிழ் ஈழம் மேற்கொண்ட மேற்படி முடிவு அறுதியானது. இறுதியானது, சர்வதேச சட்ட ரீதியானதும்கூட,

காலனி ஆட்சி ஏற்படுத்திச் சென்ற வரலாற்றுச் சிக்கலுக்கு வரலாற்று ரீதியாக தமிழ் ஈழம் எடுத்த முடிவைச் செயல்படுத்த வேண்டியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தாம். தனது காலத்தில் தமிழ் ஈழம் விடுதலை பெறுவதைத் தமது கண்களால் காணமுடியாவிட்டாலும், அமிர்தலிங்கம் காலத்தில், அமிர்தலிங்கம் தலைமையில் அது நிறைவேறும் என்ற தமது ஆசையை, வாஞ்சையை விண்டு சொல்லியிருக்கிறார் தமிழ் ஈழத்தின் தேசபிதா தந்தை செல்வா அவர்கள், தந்தையின் ஆசையை நிறைவு செய்ய வேண்டியதே மைந்தனின் கடமை. "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை!" ஔவையின் வாக்கை அண்ணன் அமிர்தலிங்கம் நிறைவு செய்வார் என்பதில் யாருக்கும் சந்தேகம் சிறு துளியும் கிடையாது.

இயக்க உருவில் பாசம் மிக்க ஒரு குடும்பத்தைத் தந்தையவர்கள் வளர்த்துச் சென்றுவிட்டார். அந்தக் குடும்பத்தின் மூத்த மைந்தன் என்ற வகையில் தந்தைக்குப் பின் தந்தையின் வாரிசாக அந்தக் குடும்பத்தின் தலைமையை ஏற்று தமிழ் ஈழத்தை அவர் வழிப்படுத்த இறைவன் அவருக்கு அருள் பாலிப்பானாக,

சட்ட ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் சிங்கள ஸ்ரீலங்காவுக்கும், தமிழ்ஈழத்துக்கும் இடையே போடப்பட்டுருந்த கட்டு அவிழ்க்கப்பட்டாயிற்று. சலுகைகள், சமரசங்கள் என்ற வார்த்தைகளால் அவிழ்க்கப்பட்ட தளையை மீண்டும் யாரும் பிணிக்க தமிழ்ச் சந்ததியை மீளா அடிமைத்தனத்தில் சிக்க வைக்கக்கூடாது என்பதே இனவுணர்வுமிக்க இளைஞர்களது விடுதலை வேட்கையாகும்.

மலையைக் கண்டால் மலையுடன் மோதுதல் மடமை, பக்கவாட்டால் கடந்து போகவேண்டும். இதனை அன்றே அமரர் நாகநாதனும் அறிந்திருந்தார். பாராளுமன்றத்தினல், பாராளுமன்றத்தினூடாகச் செய்யமுடியாவிட்டால்பக்கவாட்டால பாராளுமன்றத்தைக் கடந்து சென்றேனும் உரிமையை நிலைநாட்டவே செய்வோம் என்பது அன்னாரது கூற்று. தற்போதுள்ள சூழ்நிலையில் இயக்க இயந்திரததை, இயக்கத்தின் அணிகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதே இளைஞர் கோரிக்கை; எந்த நேரததிலும் ஆயத்த நிலையில் இருக்கின்றஒரே காரணத்தினல் தான் இஸ்ரேல் நாடு வலிமை மிக்க நாடுகளால் சூழப்பட்டுள்ள வேளையிலும் தன்னை எதிர் நோக்கும் ஜீவ மரணப் போராட்டத்தில் தன்னைத் தற்காத்துக்கொள்ள முடிகிறது. ஆபத்துவந்த வேளையில் ஆட்களுக்குத், தொண்டர்களுக்கு அலைவது அங்கு சகித்துக்கொள்ளப்படுவதில்லை. எமது அனுதாபம் பாலஸ்தீனர்கள் பக்கச் சார்புடையதாயினும், எதிரிகளிடம் இருந்தும் பாடங்கள் படிப்பது நமக்கு எப்போதும் பயன்படும்.

புதிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிவிக்கவிருக்கும் புதிய அரசியல் திட்டத் திருத்தங்களில் தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமை ஜே. ஆர். ஆல் ஏற்றுக் கொள்ளப்பட்டால் நன்று; அல்லாவிட்டால், அடக்கு முறை அவிழ்த்து விடப்பட்டால், தடைச்சட்டம் வந்தால் அவற்றைச் சந்திப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயத்த நிலையில் உள்ளதா என தலைவர்கள் தொண்டர்கள் தம்மைத்தாமே ஆத்ம பரிசோதனை செய்து கொள்வது நல்லது. நாம் எதிர்பாராத வேளையிலேயே எதிரி நம்மைச் சாடுவான் என்பதற்கு நாம் மீண்டும் ஒரு 1977ஐச் சந்திக்கத்தான் வேண்டுமா? கையறு நிலையில்தமிழ் இனம் மீண்டும் தவிக்காதிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணி மௌன நிலையில் இருந்து செயல் நிலைக்குத் தள்ளப் படட்டும் — மோதலுக்கு அல்ல.

—திரவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயசூரியன் கொடியை பறித்து கிழித்து காலில் போட்டு மிதித்தனர்!"

## இராணுவத்தினர் கொடுமைபற்றி வவுனியா சிவசிதம்பரம்!

"வவுனியா பட்டின எல்லைக்குள்ளும் எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்களிலும் வாழ்கின்ற தமிழ்மக்களின் நிலை, இன்னல் நிறைந்ததாக, மன அமைதியற்றதாக இருள்சூழ்ந்ததாக அமைந்துள்ளது. இந்தநாட்டில் பகிரங்க வீதிகளில் ஆயினும், பொது நிலையங்களில ஆயினும், ஓர் தமிழன் நடமாடும்பொழுது, அவன்தான் ஒரு இரண்டாந்தரப் பிரஜையென்றும் மற்றவர்களுக்கு அஞ்சி அடங்கிவாழ வேண்டுமென்றும் நடைமுறைகளினுலும் நிகழ்ச்சிகளினுலும் ஞாபக மூட்டப்படுகிருன். ஆகஸ்ட் கலவர வேளையில்நடந்ததுபோன்று, இன்றும் ஆங்காங்கே வழிப்பறி, கொள்ளை, இனத்துவேஷத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. நான் சைவசமயத்தை சேர்ந்த ஒருவன் என்ற முறையில் சமயப்பண்பாடின்படி வாழ்பவன். எனக்கு இறைவன் இடத்திலும் நீதியிலும் நம்பிக்கை உண்டு. உண்மையையும், நீதியையும் மனிதனுல் அழித்துவிட முடியாது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நாம் பிறந்து வாழ்கிற இந்த இலங்கைத்தீவில் மற்றவர்களுக்கு இருக்கும் சுதந்திரமும் உரிமையும் தமிழர்களுக்கும் இருக்கவேண்டும். சத்தியம் ஒருநாள் வெல்லும்!"

—இவ்வாறு வவுனியா தொகுதியில் இனக்கலவரத்தின்போது நடைபெற்ற கொடுமைகள் குறித்து தாம் அளித்த நீண்ட சாட்சியத்தின் இறுதியில் சன்சோனி ஆணைக்குழுவினருக்கு வவுனியா பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டிருக்கிருர்.

திரு. தா. சிவசிதம்பரம் அங்கு சுட்டிக்காட்டியுள்ளவற்றில் சில அம்சங்கள் வருமாறு:-

* வவுனியா இணைப்பதிகாரியின் இரண்டாவதுஉத்தியோகத்தராக இருந்த திரு. அலெகசாந்தரின் வேண்டுகோளின் பேரில் இராணுவத்தினருடன் வவுனிக்குளத்திற்கு சென்றேன். அங்கு மூவர் கொல்லப்பட்டுக்கிடந்தனர். அங்குநின்ற இராணுவத்தினர் என்னை இம்சிக்கும் முறையில், "தமிழர்கள் எல்லோரையும் வெட்டிக் கொல்லவேண்டும்; தமிழர் பரம்பரையையே இலங்கையிலிருந்து அழித்துவிடவேண்டும்;" என்று எனக்கு முன்னுல் சத்தமிட்டனர். நான் என்னை அழைத்துச்சென்ற கப்டன் செனிவிரத்தினவிடம் என்னை இப்படி இம்சிப்பதற்காகவா அழைத்து வந்தீர்கள் என்று கேட்டேன்.

* 31-3-77ல் வவுனியாவில் நடைபெற்ற ஒரு சிறு அசம்பாவிதத்தின்போதும், பொலிசார் தமிழர்களைத் தாக்கியதுமன்றி, "வவுனியாவில் இருந்து பறைத்தமிழர்கள் அகற்றப்படவேண்டும்; அடியுங்கள் இந்தப் பறத்தமிழர்களை ஓட ஓட," என்று இனவெறியைத் தூண்டியிருந்தார்கள்.

* வவுனியா தொகுதியில் மொத்தம் 382 தமிழர் வீடுகள் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

* எனது ஜீப்வண்டியில் பறந்த எனது கட்சிக் கொடியை (உதய சூரியன் கொடியை) இராணுவத்தினர் பறித்து கிழித்து நிலத்தில் போட்டு உழக்கினுர்கள்.

* வவுனியா கடை வீதியில் எனது கட்சிக்காரியாலயத்தில் பறந்து கொண்டிருந்த உதய சூரியன் கொடியை இரண்டு இராணுவ வீரர்கள் அகற்றும்படி கட்டளையிட்டனர். அதற்கு அங்கு பொறுப்பாக இருந்த வீரசிங்கம் என்பவர் மறுக்கவே, ஒரு இராணுவ வீரர் மேல் மாடிக்கு ஏறிச் சென்று பறந்து கொண்டிருந்த கொடியையும்கொடிக் கம்பத்தையும் அகற்றிச் சென்றுர்,

* வவுனியா தெற்கு சிங்களப்பகுதி உதவி அரசாங்க அதிபர் ரஞ்சன் சமரவீரா, 20-8-77 மாலை ஓர் அரசாங்க ஜீப் வண்டியில் 'வீரய்மடுவன' என்னும் சிங்களக் கிராமத்திற்குச் சென்று அங்கு சிங்கள மக்களை அழைத்து, வவுனியாப்பட்டினத்தை எரிப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்தாகிவிட்டது; ஆகவே உங்களது பங்கை நீங்கள் செய்யவேண்டும்; நீங்கள் நான் அனுப்பும் வாகனத்தில் அலவாங்கு. துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் மடுக்கந்த விகாரைக்கு வந்துவிட வேண்டும்; என்று கூறியதைக் கேட்டுக் கொண்டுநின்ற ஒருவர் என்னிடம் வந்து அறிவித்தார். அவரது வாக்கு மூலத்தை சத்தியக்கடதாசி மூலம் பெற்று பிரதம மந்திரிக்கு (ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு) அனுப்பியுள்ளேன்.

* தமிழர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை அரசாங்கவாகனங்களில் ஏற்றி வவுனியா தெற்கு சிங்களப்பிரிவு உதவி அரசாங்க அதிபரும் மடுக்கந்த கிராம சேவகரும் இன்னும் சிலரும் கிராமப்புறத்திற்கு சென்று பங்கிட்டதாகவும்; பங்குபோடும் வேளையில் ஏற்பட்ட சச்சரவின் விளைவாக துவக்குச் சூடுசம்பவம்நடைபெற்றதாகவும்இதனுல் மடுக்கந்த கிராம சேவகர் கையில் காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றதாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறிந்தேன்.

* இலங்கையின் மற்றப் பகுதிகளில் கலவரத்தின் பின்னர் ஓரளவு நிலைமை சுமூகமாக வந்துவிட்ட பின்னரும் வவுனியாவையும் அதன் எல்லைப்புற கிராமங்களையும் பொறுத்தவரை இன்னமும் நிலைமை சுமூகமடையவில்லை. இன்றுவரை ஆங்காங்கு கலவரங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. எல்லைப்புற கிராமங்களில் தமிழ் மக்கள் விவசாயம் செய்வதைக் கூட சிங்களவர்கள் தடுக்கின்றனர்.

---

## கோப்பாயில் கூட்டணியின் தேசியமாநாடு!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாடு கோப்பாய்த்தொகுதியில் மே 12, 13, 14ம்திகதிகளில் நடைபெறும். இந்த முடிவு யாழ்ப்பாணத்தில் 8-4-78ல் நடைபெற்ற கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. கோப்பாய் தொகுதியின், தொகுதிக்கிளை இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகளை கவனிப்பதுடன், அதுவே மாநாட்டு வரவேற்புக்குழுவையும் தெரிவு செய்யவிருக்கிறது. விரைவில் கோப்பாய் "மகாவனவில்" நடைபெறும் கோப்பாய் தொகுதி மத்திய கிளைக் கூட்டத்தில் வரவேற்புக்குழு தெரிவு செய்யப்படும்.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலை உணர்வுக்கு கால்கோளிட்டவரும், இனத்துக்காக உடல், பொருள், ஆவி, மூன்றையும் அர்ப்பணித்தவருமான கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் பிரதிநிதித்துவம் வகித்த இத்தொகுதியில் நடைபெறும் இம்மாநாடு தமிழ்ஈழ அரசியலில் புதிய திருப்பத்துக்கும் எழுச்சிக்கும் வித்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சன்சோனி ஆணைக்குழு...

—3-ம்பக்கத் தொடர்

தோன்றி சுதந்திரக்கட்சியைத்தாக்கி நானே இயற்றிய பாடலொன்றை பாடினேன். ஆகஸ்ட்கலவரத்தின் போது குண்டர்கள் அந்தப் பாட்டை இசைத்துக் கொண்டே எனது வீட்டை உடைத்தனர். கல்கமுவ யூ.என்.பி. எம்.பி. திரு. லொக்குபண்டாவை சந்தித்து தேர்தலில் உங்கள் வெற்றிக்கு உழைத்தேனே என்னைக் காப்பாற்றுங்கள் என்றேன். வந்துஉதவிசெய்வதாக உறுதியளித்தார். ஆனுல் அந்தப்பக்கம் தலைகாட்டவே இல்லை. தமிழ்க் கடைகள் தாக்கப்பட்ட சமயமும் அவரைக்காணவில்லை!

—நாச்சிமுத்து உலகநாதன்.

* *

### காட்டுக்குள் ஒடினர்

"கெக்கிராவையிலுள்ள எனது ஆலையில் நின்ற ஆறு லொறிகள் முற்றுக எரிக்கப்பட்டுவிட்டன. இந்தலொறிகளை பொலீஸ் நிலையத்தில் விட அனுமதிமறுக்கப்பட்டதால் எனது ஆலையில் கொண்டுவந்துவிட்டார்கள். ஆகஸ்ட் 19ம் திகதி காலை 9மணிக்கு ஆலை தாக்கப்பட்டது. ஆலையில் இருந்த தொழிலாளர்கள் காட்டுக்குள் ஒடிவிட்டார்கள். லொறிச் சாரதிகளும், லொறியில் வந்தவர்களும் காட்டுக்குள் கொல்லப்பட்டனர்."

—நாகமுத்து சிவப்பிரகாசம்

* *

### சென்றவர் திரும்பவில்லை

"என் கணவர் லொறியில் கெக்கிராவைக்கு சென்றுர்; சுப்பிரமணியம் ஆலையில் தங்கினுர் ஆகஸ்ட் 19ம் திகதி காலை ஆலையை குண்டர்கள் தாக்கினார்கள். என் கணவர் காட்டுக்குள் ஒடி விட்டார். டிரைவர் துரைராசாவும் காட்டுக்குள் ஒடினுர். என்கணவர் திரும்பி வரவில்லை. அவர் காட்டுக்குள் கொல்லப்பட்டார், அவரது சடலம்கூட கிடைக்கவில்லை. அச்சுவேலியைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி,குமாரசிங்கம், பாலரலியைச் சேர்ந்த கந்தையா சின்னராசா, கந்தசாமி கிருபாகரன் ஆகியோரும் காட்டுக்குள் கொல்லப்பட்டதாக அறிந்தேன். காட்டுக்குள் தமிழர்களை குண்டர்கள் துண்டுதுண்டாக வெட்டிக்கொலை செய்து வாய்க்காலுக்குள் போட்டார்கள் என அறிந்தேன்."

—இராசரத்தினம் கைம்பெண் சின்னத்தங்கம்

* *

### தமிழர்களை வெட்டி கொன்று ஆற்றில் வீசினர்!

"கெக்கிராவை சுப்பிரமணியம் ஆலைக்குள் தஞ்சம் புகுந்திருந்த லொறிக்காரர்கள் சிங்களகுண்டர்களுக்குப் பயந்து காட்டுக்குள் ஓடினுர்கள். அப்படி ஓடியயாவரும் காட்டுக்குள் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டு ஆற்றுக்குள் வீசப்பட்டனர். நான் கிளீனராக வேலைபார்த்து வந்த லொறிசொந்தக்காரர் பூபால சிங்கமும் இவ்வாறு வெட்டிக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர். பூபால சிங்கமும் ஏனையோரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்டதாக சனங்கள் தெரிவித்தனர். அவர்களை யார் கொலை செய்தார்கள் என்ற பெயர் விலாசங்களையும் சனங்கள் தெரிவித்தனர். நாம் பொலீஸ் நிலையம் சென்று புகார் செய்ய முயன்ற போது புகாரைப் பதிய பொலிசார் மறுத்துவிட்டனர்."

—இளையதம்பி கந்தசாமி

* *

### இரத்மலானை இரட்டைக் கொலை!

"பொறியியலாளராகிய எனது கணவரும், எனது தந்தையும் இரத்மலானையில் உள்ள எமதுவீட்டில்வைத்து குண்டர்களால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். அவர்களது சடலங்களைக்கூட எமக்கு தரவில்லை. யாழ்ப்பாணத்துக்கு பிரேதங்களை கொண்டு போகக் கூடாது என்றுஇரத்மலானை பா.உ. திரு. அத்துலத்முதலி கூறிவிட்டார். இரத்துமலானைக்கும் கொண்டுபோக பிரேதங்கள் தரப்படவில்லை, களுபோவலை மருத்துவமனையில் சடலங்களைப் பார்ப்பதற்காக போனவரும் குண்டர்களால் தாக்கப்பட்டார்."

—திருமதி சரஸ்வதி இராசேஸ்வரி பெனடிற்

* *

### சேகுவேராவும் பங்குகொண்டனர்!

"1971ம் ஆண்டு நடைபெற்ற சேகுவேரா குழப்பத்தில் கைதாகி ஆறுமாதம் சிறைசென்று விடுதலையான களுபாத்தையா என்பவரும் அளவையில் தமிழர்கள்மீது நடைபெற்ற தாக்குதலில் பங்கெடுத்தார். குண்டர்களுடன் குண்டராக அவரும் காணப்பட்டார்."

—இரத்தினசிங்கம் பிரான்சிஸ் கிறிஸ்டி.

---

மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப்

ஆரோக்கிய வாழ்விற்கு மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப் பாவியுங்கள். அரைக்கட்டியாகவும், முழுக்கட்டியாகவும் கிடைக்கும்

ஓர் மில்க்வைற் தயாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறமொழித் தேசிய கீதத்தை தமிழன் ஏற்கலாமா?

# சிங்கக்கொடிக்கும் சிறீலங்கா தேசிய கீதத்துக்கும் இங்கு நாம் மரியாதை செய்ய மறுக்கிறோம்!

## சாலையின் சர்ச்சைகளுக்கு கட்டுரையாளரின் பதில்!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் அதையொட்டிய எனது சில அனுபவங்களையும் தொகுத்த மூன்று கட்டுரைத்தொடர்களைச் சுதந்திரன் இதழ்களிலே வெளியிட்டு அவற்றிலே ஏதாவது சந்தேகங்கள் எழின், அவை அறிவிக்கப்படுமிடத்து, இயலுமானளவு தீர்த்து வைக்கப்படுமென அறியத்தந்திருந்தும் முனைவர் சாலை இளந்திரையன், பரிமளா மணாளன் ஆகிய இருவர் மட்டுமே தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இருவரும் "இந்திய நாட்டவர்கள்—என் இனிய நண்பர்கள். உள்ளத்தாலும் உடலாலும் தமிழ் வாழ உழைப்பவர்கள்; குறிப்பாக, எமது தமிழீழ மலர்ச்சிக்காகத் தொண்டாற்றுபவர்கள்' அவர்களில் முனைவர் சாலையோ தமிழிலே நன்கு புலமை பெற்றவர்; பல்கலைக் கழகமொன்றில்பேராசிரியர் நடுத்தர வயதினர். உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தை உருப்படுத்தி நெறி வகுத்தவர். பரிமளாவோ ஓரளவு தமிழ் படித்தவர். என் வயதொத்த இளைஞர். உ.த.ப.இ. முதல் மாநாட்டின் பார்வையாளராகக் கலந்து கொண்டவர். இவ்வாறாக இவர்களை நன்கு அறிமுகப்படுத்தியது வாசகர்கள் அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக மட்டுமன்றி, எம்முள் ஏற்படுகின்ற சில சர்ச்சைகள் தமிழீழ விடிவுக்காகவேயன்றிக் குரோத உள்ளப்பாங்கினாலல்லவென்பதையும் அறியத்தருவதற்காகவே;

### முனைவரின் பெருமையை மறைக்கவில்லை

முனைவர் சாட்டிய குற்றங்களிலே முதலாவது, 'பெருமைகள் யாருக்கு என்பது முக்கியமல்ல உண்மைகள் செம்மையாகத் தரப்படுதல் வேண்டும்' என்ற கூற்றின் வழி ஒழுகாமை. அதாவது, குரும்பசிட்டி கனகரத்தினம் ஓர் ஆசையளவாக வைத்திருந்த கரடுமுரடான எண்ணத்திற்கு உ.த.ப.இ. என்ற இனிய பெயரையும் கொடுத்து அதற்கு ஒரு தலைமையையும் கொடுத்து இயக்கத்தை வளர்த்து வலுப்படுத்திய தன்னை விடுத்து 'தேசாபிமானம்' காரணமாகவோ என்னவோ, ஈழத்துக் கனகரத்தினத்தையே 'எல்லாமாக'க் காட்டியுள்ளமை!'

'அதன் தாய், தந்தை' பாதுகாவலர் இன்னோரன்ன எல்லாமாக இயங்குபவர் குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. இரா. கனகரத்தினம் அவர்களாவார்' என்று முதற்பந்தியிலே குறிப்பிட்டயான், இரண்டாவது பந்தியிலே, 'தமிழ்ப்பண்பாடுகாக்கப்பட வேண்டுமென்றே தீராக் காதலால் அவதியுற்று விரகதாபம் மேலிடக் காண்போரையெல்லாம் நாடிய பேசா மடந்தையான கனகரத்தினம் அவர்களை முனைவரின் துணை கருக்கொள்ள வைத்தது' என்று குறிப்பிட்டு முனைவர் அவர்களுக்கு உ.த.ப. இயக்கத்தின் தந்தை' என்ற நிலையைக் கொடுத்த தோடல்லாமல் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, என்ற தமிழ் மூதாட்டியின் வழி நின்று மேற்படி இயக்கத்தின் நோக்கு என்னவென்பதையும் முனைவரின் கூற்றாகவே தந்திருந்தேன்.

சாதாரணமாக கொடுபட வேண்டிய பெருமைகள் அவற்றுள் அடங்கி விட்டதாகவும் முனைவர் மேற்படி இயக்கத்திற்கு முன்னர் தலைமை வகித்ததையும் அப்போது அவராற்றிய தொண்டையும் பற்றி மீண்டும் எழுதி ஞாபகத்திற்குக் கொண்டுவர வேண்டிய நிலையிலே தமிழினம் இல்லையென்றும். இன்றுவரை மட்டுமன்று இனிமேலும், தான் மட்டுமன்றித் தன் துணைவியாரோடும், தமிழுக்கு மட்டுமன்றித் தமிழீழ மலர்ச்சிக்கும் அரும்பாடுபடும் முனைவரின் பழைய பெருமைகளைக் கூறவேண்டிய அவசியமில்லையென்றும் கருதியே அவ்வளவில் நிறுத்தி விட்டேன்.

### பிறமொழியில் தேசிய கீதம்

இரண்டாவதாகக் குறிப்பிட்டிருந்த குற்றம் தேசிய கீதம் பாடுதலென்ற அரசியற் சம்பிரதாயத்தைப் பெரிது படுத்தியமையும் 'வங்காள மொழியிலமைந்ததென்பதை இந்தி மொழியில் அமைந்ததெனக் கூறியதுமாம்.

இந்தி மொழியெனக்குறிப்பிட்டமை உண்மையிற்றவறே. ஆனால், தமிழல்லாதவோர் மொழியிலமைந்த தேசிய கீதத்தைத் தமிழராற் கூட்டப்பெற்ற தமிழ்ப் பண்பாட்டு விழாவொன்றின் இறுதியிலே பாடியமையை யான் பெரிதுபடுத்தியமைக்கான காரணம், இலங்கையென்பது இரண்டு நாடுகளைக் கொண்டுள்ள ஒரு தீவு என்ற உண்மையை நன்கு உணர்த்துவனென்பதாலே ஸ்ரீலங்காவின் ஆட்சியாளராலே எம்மீது திணிக்கப்படும் யாவற்றையும் எதிர்க்கவேண்டுமென்ற வழியிலே சிங்கக் கொடியும் ஸ்ரீலங்காவின் தேசியகீதமும் எம்மீது வலிந்து நுழையும் போது மரியாதை செய்ய மறுக்கின்ற வழக்கமுடையவனாயிருக்கின்றமையே மேலும் 'சாதாரண சம்பிரதாயங்கள்' என்ற காரணத்தால் எதனையும் ஏற்கமறுக்கும் புரட்சிகரமான எண்ணங்கள் மூலம் மக்களைக் கவருகின்ற முனைவர் இவ்வாறு எழுதியமை என்னை வியப்பிலாழ்த்தியது.

### இராசாமுகம்மது கூற்று!

என் மீது சுமத்தப்பட்ட மூன்றாவது குற்றம், இயக்க மாநாட்டிலே பங்குகொள்ள மறுத்துத் தனித் தனி கூட்டம் போட்டுப்பேசிய கருணாநிதி, எம். ஜி. ஆர். ஆகியோரின் பேச்சுகளைக் கட்டுரை மூலம் தந்துள்ள வேளையிலே 17-12-77 இல் அமைச்சர் இராஜா முகமது அவர்கள் மாநாட்டு மேடையிலே பேசியவற்றில் "1974இல் உலகத் தமிழ் மாநாட்டின்போது ஒன்பது தமிழர்களை யாழ்ப்பாணத்திலே சுட்டுக் கொன்றுவிட்டு இந்தியாவுக்குவந்த ஸ்ரீமாவோ அம்மையாரை அந்நாள் முதல்வர் திரு. கருணாநிதி ஓடோடிச் சென்று வரவேற்றார்; அப்போது அவருடைய கட்சியிலிருந்த நாங்களெல்லாம் வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் கருணா [illegible] மல் விட்டமையாகும். மேற்படி பகுதியைக் குறிப்பிடாமைக்குக் காரணம், கருணாநிதி ஸ்ரீமாவோவை வரவேற்றமை சாதாரண அரசியற் சம்பிரதாயமென நான் திருப்தி கொண்டமையாலன்று; குறிப்பிட்ட வரவேற்பு நடைபெற்ற வேளையிலேயே எம் எதிர்ப்புக் குரல் இங்கிருந்து கிளம்பிற்று என்பதாலேயே.

### அனைத்து எழுத்தாளர்களையும்குறைகூறவில்லை

நான்காவது குற்றம் தமிழக எழுத்தாளர்கள் அனைவரையுமே 'முதுகெலும்பற்றவர்கள்' என வர்ணித்தமையாகும். இங்கு, பரிமளா மணாளன் தனது கட்டுரையிலே, ஆனால் இவர்களது வீரத்தைக்கண்டுமுதுகெழும்பற்ற எழுத்தாளர்களென்று குறிப்பிட்டிருக்கிறார். அங்கே நண்பர் ஆண்மையற்ற எழுத்தாளர்கள் என்ற பொருத்தமான சொல்லைப் போட்டிருக்கலாம்; தமிழை விற்றும் தமிழனைச் சுரண்டியும் பிழைக்கும் இவர்களுக்கும் விபச்சாரிகளுக்கும் வேறுபாடு காண்பது கடினம்" என்று குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கற் பாலது; பரிமளாவும் தமிழ்நாட்டுத் தமிழனே. எனினும், "எம்முடைய பிரச்சனை வெறும் மொழிப்பிரச்சனையல்ல—இனப்பிரச்சனையுமல்ல. அது விடுதலைப் பிரச்சனை—இறைமைப் பிரச்சனை உயிர்ப்பிரச்சனை என்று மீண்டும் மீண்டும் எடுத்தோதியும் சாதாரண மக்களுக்கு ஒரு முறையிலேயே விளங்கிய அப்பிரச்சனை எழுத்தாளர்களுக்குப் புரியவில்லையென்றால் அது மூளையில்லையென்பதாலன்று —முதுகெலும்பில்லாமையாலேயே "என்று என்னாலெழுதப்பட்டவரிகள் உண்மை நிலையை உணர்ந்தும் உணராதார் போன்று நடிக்கின்றவர்களை மட்டுமே தாக்குகின்றன என்பதை மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லையன்றோ!

### அரசியல்வாதி அறிவியல்வாதி

ஐந்தாவதாக, இரா. ஜனார்த்தனம், முனைவர்சாலை ஆகியோரைப்பற்றி எழுதாமல் விடுத்து, தமிழுக்காகவும் தமிழருக்காகவும் 'ஓகோ' வென்று எப்போதாவது சத்தம்போடும் திரு. மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகியோரைப்பற்றி அனல்கக்காமல், வேறு யார் யாரோ மீதெல்லாம் அனல்கக்கியுள்ளேனென்ற குற்றம் என்மீது உள்ளது. இதற்கு, "அரசியல்வாதி, அறிவியல்வாதி என்றவிருவரும் வெவ்வேறான தன்மையாளர்கள்-வேறு வேறான முறையில் இயங்க வேண்டியவர்கள்-வேறு வேறான முறைகளில் மக்களால் அணுகப்பட வேண்டியவர்கள் — அவ்வாறே உபயோகப்படுத்தப் படவும் வேண்டியவர்கள்" என்ற சிறு விளக்கத்தை அளித்தாற் போதுமானதென்று கருதினாலும், 'விடுதலைப் போரிலீடுபடுகின்ற அரசியல்வாதியல்லாதவர்களுக்கு விளம்பரம் தேவையற்றவொன்று' என்ற கொள்கையை ஆதரிக்கின்றவனென்பதையும எடுத்தியம்ப விழைகின்றேன்.

### நிதானித்து வெடிவைத்தேன்

மொத்தத்திலே என் மீது சுமத்தப்பட்ட குற்றம், என் கட்டுரைகளிலே போதிய ஆழமும் நிதானமும் இல்லையென்பதுவே. நீரைத்தேடி அலைகின்ற மனிதன் நிலத்தைப் பலவிடங்களிலுந் தோண்டுகின்றான்; சில இடங்களிலே மிகவிரைவிலே நீர் வந்து விடுகின்றது; சில தரையிலே அனல்கக்கும் வெடி வைத்தாற்கூட நீரூற்றைக் காணவியலாமற் போவதுண்டு. இதன் காரணமாகவே ஆழ வேறுபாடுகள் ஏற்படுகின்றன. யானும் நன்றாக நிதானித்தே வெடி வைத்துள்ளேன்.

### தமிழ்ஈழத்தை நோக்கி விரைவோம்!

பரிமளா மணாளன் அவர்களது கட்டுரையிலே ஆண்மையற்ற எழுத்தாளர்களைப் பற்றி அவர் கூறியுள்ளமை எம் தமிழ்த்தலைவர்களைத் தமது தலைவர்களை மட்டுமன்றித் தம்மையும் சந்திக்கவருமாறு வரவேற்றுள்ளமையும் அறிவாற்றல் மிகக் குறைந்த என் போன்றோராலேயே மக்களை அழவைக்க முடிந்ததென்றால் எமது விடுதலைத்தலைவர்கள் வெளி நாடுகளிலேபுனிதபயணம் மேற்கொண்டால் அது எவ்வளவு தூரம் எம் இலட்சியத்திற்குத் துணை நிற்கும் என்பதுவும் மலை நாட்டுச் சகோதரர்களுக்கு அவரது அறிவுரையும் இறுதியாக வசதி படைத்த ஈழத் தமிழரிடம் அவர் வேண்டி நிற்பனவும் எம்மால் மீண்டும் மீண்டும் சிந்திக்கற்பாலன.

எனவே, அன்பர்களே! எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் கண்டு அவற்றிலே திண்மையுடையராகி எண்ணிய எண்ணியாங்கு எய்தி, எமது தமிழீத்தை விரைவிலே அமைத்துத் தந்தை செல்வாவின் புனித இலட்சியத்தைநிறைவேற்றி வைப்பீர்களாக.

வாழிய தமிழீழம்!!

க. இராஜமனோகரன்

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தமிழ் அரசனுக்கு சிங்களவர் திறை செலுத்தினர்!

## அதிலிருந்து அவர்களை மீட்டதும் ஒரு தமிழனே!

செ. நாகலிங்கம்
தொண்டமானாறு.

**இந்தநாட்டில்தமிழர்வரலாறுதிரிக்கப்படுகிறது; தமிழர் சிங்களப் படைகளில் கூலிவேலைசெய்யவும், வியாபாரநிமித்தமும் இங்கு வந்தேறிய குடிகள் என்றுதமிழினத்தை இழிவுபடுத்தும்விதத்தில்கட்டுக்கதைகள் வரலாருக தமிழ்மாணவர்களுக்கு இன்றுபோதிக்கப்படுகின்றன. தமிழன் இந்தநாட்டை ஆண்டதுமில்லை; இங்கு தமிழ் அரசு இருந்ததேயில்லையென்றுகூட சாதிக்கசிங்களவர்கள் முற்பட்டிருக்கிருர்கள். சிங்களவர்களின் இந்த அபத்தத்தை கிழித்தெறிந்து மகாவம்சத்துக்கும்முந்திய பழையசிங்களநூல்களிலிருந்து ஆதாரங்காட்டி, தமிழர்கள் இந்த நாட்டை ஆண்டிருந்தபோது, தமிழர்களுக்கு சிங்களவர்கள்திறை செலுத்தியதையும், திறைகொடுக்கும் நிலையிலிருந்தசிங்கள அரசனை அதிலிருந்து நீக்கிக் காப்பாற்றியவன் கூட ஒரு தமிழன்தான் என்பதையும் இக்கட்டுரையில் ஆதாரத்துடன் விளக்குகிருர்கட்டுரையாளர்.**

இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்ததமிழர்கள் பலகாலகட்டங்களில் இலங்கையை ஆண்டார்களென்பதுபொதுவாகயாவரும் அறிந்த உண்மை. அவைகள் யாவும் சிங்களவரின் பிரதான வரலாற்று நூலாகிய மகாவம்சத்திலே கூறப்பட்டுள்ளன: ஆனுல் இலங்கையிலே நிரந்தரமாக வாழ்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கை நகரையும், நல்லூரையும் தலைநகரங்களாகக்கொண்டு ஒரு வலிமை பொருந்திய சுதந்திரத்தமிழரசை அமைத்து தங்களைத் தாங்களே அரசு செய்து வந்தார்களென்ற உண்மையை இலங்கைப் பாராளுமன்றத்தில் விவசாய அமைச்சரும் வேறு பல சிங்களப்பிரதிநிதிகளும் மறுத்திருந்ததைச் சுதந்திரனில் சில மாதங்களுக்கு முன்னர் வாசித்தபோது பெரும் ஆச்சரியமடைந்தேன்.

இவர்களுக்கு இலங்கையின் வரலாறு தெரியாதா அல்லது தமிழர்களுக்கு அது தெரியாதென்று எண்ணுகிருர்களாவென்ற கேள்விகள் தான் என்மனதில் எழுந்தன இவர்களுடையபேச்சுக்களிலே மகாவம்சத்தைப் பற்றித் தான் பேசியிருக்கிருர்கள். ஆனுல் மகாவம்சம் பல குறைகள் உள்ள ஒரு நூல் என்பதைச் சிங்களவர்களும் மறுக்கமாட்டார்கள். அதிலுள்ள ஒரு பெருங்குறை என்னவென்ருல் பல பிரதான விஷயங்களை, அதிலும் தமிழர்களைப்பற்றிய விஷயங்களை மூடி மறைத்ததேயாகும்.

### மகாவம்சம் மறைத்த உண்மை

இலங்கையில் தமிழ் இராச்சியம் ஒன்று இருந்ததென்பதை மகாவம்சம்அடியோடுமறைத்து விட்டது. யாழ்ப்பாண அரசுக்கு எதிராக சப்புமல் குமராய அல்லது செண்பகப் பெருமாள் என்ற சிங்கள இராசகுமாரன் படையெடுத்து வந்து வென்று சில ஆண்டுகள்அரசுசெய்ததைக் கூட அது முற்ருக மூடி மறைத்து விட்டதென்ருல் மகாவம்சத்தின்பூரணத்துவத்தை அல்லது குறைபாட்டைப் பற்றி என்ன சொல்லலாம்? அந்தப்படையெடுப்பு பற்றிக் குறிப்பிட்டால் யாழ்ப்பாண அரசு ஒன்று இருந்ததாக முடிந்துவிடும். ஆகையால் அதை மறைத்து விட வேண்டும். இப்படியானதுதான் மகாவம்சம் என்பதைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்,

மகாவம்சத்தைவிட சிங்களவர்களாலேயே எழுதப்பட்ட வேறு பல வரலாற்று நூல்களுமிருக்கின்றன வென்பதை தமிழ் மக்கள் பொதுவாக அறிந்திருக்கவில்லை போலத்தெரிகிறது. இராஜவாளிய, பூஜவாளிய, நிக்கயசங்கிரகவ. இராஜ இரத்தினுதிகாரி. கோகில சண்டேச போன்ற நூல்களில் மகாவம்சத்தில் இல்லாத பல அரியவிஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

### யாழ்ப்பாண மன்னனுக்கு சிங்கள மன்னன் திறை

"கோகிலசண்டேச" செண்பகப்பெருமாளின் வெற்றி பற்றி மிக விரிவாக்கூறும் ஒரு கவிதை நூல். இராஜவாளிய, நிக்கய சங்கிரகவ ஆகியவை யாழ்ப்பாண அரசைப்பற்றிப்பல பிரதான விஷயங்களைக் கூறுகின்றன.

யாழ்ப்பாணஆரியச்சக்கரவர்த்திகளுக்குச் சிங்கள மன்னர் திறைகொடுத்து வந்தார்களென்றும் அவர்களை அந்தப் பரிதாப நிலையிலிருந்து நீக்கியவன் அழகக்கோனுர் என்ற தமிழன் தானென்றும் அவை கூறுகின்றன.

இந்த அழகக்கோனுர் என்ற தமிழன் ஒரு சிங்கள உயர் குடும்பப் பெண்ணை விவாகஞ் செய்திருந்தானென்றும், காஞ்சிபுரபுரந்தர, கிரிவம்சசேகர, நிசங்க அழகேஸ்வர, போன்ற பல விருதுப் பெயர்களை[illegible]யிருந்தானென்றும் அவை கூறுகின்றன.

### யாழ்ப்பாண அரசன் படையெடுப்பு

இவன்யாரென்பதை நான் இங்கே ஆராயத்தேவையில்லை. இவன் ஆரிய அரசரின் உறவினன் என்பது என்னுடைய முடிவு. இவன் சிங்கள அரசனுகிய நாலாம் விக்கிரமபாகுவின்(1347—1375) அமைச்சனுயிருந்தான். இவனே கோட்டை என்று இன்று சொல்லப்படும் ஜயவர்த்த கோட்டை என்ற அரண் செய்யப்பட்ட நகரைக் கட்டியவன். அதைக் கட்டியபின் யாழ்ப்பாண அரசனுக்குச் சிங்கள அரசன் கொடுத்து வந்த திறையைக் கொடாது நிறுத்தி விட்டான். அந்தக் காரணமாக யாழ்ப்பாண அரசன் திறையை வாங்கிவரும்படி தன் தூதுவரை அனுப்பினுன். அழகேஸ்வரன் அந்தத் தூதுவரைத் தூக்கிலிட்டான். அதன்பின் யாழ்பாண அரசன் படையெடுத்துவந்து சிலாபம் தொடங்கிக் கொழும்பு வரையிலுள்ள நாட்டைச் சுவீகரித்ததாகவும் ஈற்றில் அழகேஸ்வரன் வென்று தமிழர் படையை அழித்ததாகவும் இந்த நூல்கள் கூறுகின்றன.

## தனித்தமிழ் அரசு இருந்ததை மகாவம்சத்துக்கு முந்திய சிங்கள நூல்கள் உறுதிசெய்கின்றன!

### ஜெர்மன் பேராசிரியர் குறிப்பு

மகாவம்சம் இவைகளைப் பற்றி ஒன்றும் கூருமல் அழகக் கோனுரைப் பற்றியும் சுருக்கமாக கூறி முடித்து விட்டது. அதைப்பற்றி மகாவம்சத்தை மொழி பெயர்த்த ஜெர்மன் பேரா[illegible]ரியர் கைகர் (Geiger) தன்னுடைய அடிக்குறிப்பில் கூறியிருப்பதை இங்கே கூற விரும்புகிறேன்:—

"Our chronichler makes short work of the undoubtedly emirnet personality of this man. There is a good deal more about the founder of Jayavaddhana in the Rajav, the Rajaratne, and the Nika. What is above all important is that Alagakkonara succeeded in breaking the power of the Jaffna king whieh was then at its height."

இதன் தமிழாக்கம்!

'எங்கள் வரலாற்றுக்கியோன் இந்த மனிதனின் சந்தேகத்துக்கப்பாற்பட்ட உன்னத உருவத்தை வெகு சுருக்கமாய் முடித்து விட்டார், ஜயவர்த்தன (கோட்டை)யின் அமைப்பாளனைப் பற்றி இராஜஇரத்தினு (திகாரி), நிக்கய (சங்கிரகவ) போன்ற நூல்களில் மிக அதிகமாய்,காணக்கிடக்கிறது யாவற்றிலும் பிரதானம் என்னவென்ருல் அழகக்கோனுர் அந்தக் காலத்தில் உச்சகட்டத்திலிருந்த யாழ்ப்பாண அரசனின் ஆதிக்கத்தை உடைத்ததேயாகும்;"

இப்போதாவது சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள அரசரிடம் திறை வாங்கக்கூடிய வலிமைபெற்றயாழ்ப்பாணத் தமிழ் அரசு ஒன்று முன் இருக்கவில்லையென்று சொன்னுலும் கி. பி. 1347 தொடக்கம் கி. பி. 1619 வரையிலிருந்ததென்பதை ஏற்றுக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

திறை கொடுக்கும் நிலையிலிருந்து சிங்கள அரசரை ஒரு தமிழன் தான் நீக்கிக்காப்பாற்றினுனென்பதையும் அவர்கள் மறந்து விடக்கூடாது.

### தமிழனுக்கு எப்போது விடுதலை

இங்கே நிக்கய சங்கிரக என்ற நூலிலிருந்து ஒரு வசனத்தைக் கொடுக்க விரும்புகிறேன்!— "அழகக் கோனுர் கோட்டையைக் கட்டியபின் சிங்கள, தமிழ் வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் படையை அதில் அமர்த்தித் தான் அவர்களின் மத்தியில் நின்ருனென்று" அந்தநூல் கூறுகிறது. And in the inner city he stationed himself surrounded by his great armies of Sinhalese and Tamils lions in bravery."

எல்லாளனை வென்றதுட்டகைமுனு, சோழர்களை இலங்கையிலிருந்து துரத்திய முதலாம் விசயவாகு, இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் படையெடுத்துச் சென்று பல வெற்றிகள் ஈட்டிய முதலாம் பராக்கிரமவாகு கலிங்கமாகனைப் பொலநறுவையிலிருந்து வடக்கேதுரத்திய இரண்டாம் பராக்கிரமவாகு யாழ்ப்பாண அரசருக்குத்திறைகொடுத்துவந்த நிலையிலிருந்து தப்பிய நாலாம் விக்கிரமவாகு யாழ்ப்பாணத்துக்குத்தன் பெருமகனுகிய செண்பகப் பெருமாளை அனுப்பி கனகசூரிய சிங்கை ஆரியனை வெற்றி கொண்ட ஆரும் பராக்கிரமவாகு யாவரும் அனேகமாகத் தமிழர்களின் உதவியைக் கொண்டே வெற்றியீட்டினுர்கள்;

செண்பகப் பெருமாளின் தந்தை பணிக்கன் எனப்பட்டவான் வித்தை கற்பிக்கும் ஒரு தமிழன். இவனும் யாழ்ப்பாண அரசர்களின் உறவினன் என்பது எனது கருத்து இந்தச் செண்பகப் பெருமாள் தான் நல்லூர்க் கந்தசாமி கோவிலைக் கட்டுவித்தவன்.

பல தமிழர்கள் செண்பகப் பெருமாளின் படையிலிருந்தார்களென்று நூல்கள் கூறுகின்றன. தமிழர்கள் எப்போ தங்கள் உற்ருர், உறவினர் நண்பர்கள் யாவரிலும் பார்க்கத் தமிழ் அன்னையை நேசிக்கத் தொடங்குகிருர்களோ அப்போதுதான் தமிழினம் விடுதலையடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலைவிழாவில் சிங்களப் பாடலா?

கொழும்புவளாகத்தமிழ்ச் சங்கத்தின் கலைவிழா 26-3-78 ஞாயிற்றுக்கிழமை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பரத நாட்டியமும் ஒன்று.

பரத நாட்டியத்தின் பின்னர், ஒருசிங்களப்பாடலுக்கு நாட்டியம் நடைபெற்றது. இதைப் பொறுக்கமாட்டாத ஓரிருவர் மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

தமிழ்கலைவிழா என்றபெயரில் சிங்கள கலைகலாச்சாரத்தைப் புகுத்தஎவ்வாறுதமிழ் மாணவர்களுக்கு மனச்சாட்சி அனுமதித்ததோ நாமறியோம்.

சிங்கள மாணவர்கள் நடாத்தும் கலைவிழாவிற்கு தமிழில் நிகழ்ச்சி ஏதாவது நடைபெறுகிறதா? ஏன் இந்த எண்ணம் தமிழ் மாணவர்களுக்கு வந்ததோதெரியவில்லை. சிங்கள எசமானர்களைத் திருப்திப்படுத்த தமிழ் அடிமைகள் தங்கள் மானத்தையும் விற்பதற்குத்தயாராக இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

தமிழ் ஈழத்தின் தேசிய கீதத்தை, பரதநாட்டியத்திற்கு நட்டுவாங்கம் செய்த பெண்மணி பாடினர். ஆனால் அது முழுமையாகப் பாடப்படவில்லை. ஏனென்றும் எமக்குப் புரியவில்லை.

இன்னுமொன்றையும் இங்கு குறிப்பிடவேண்டும். நம்மவர்கள் ஏதாவது அரங்கேற்றத்திற்கு சிங்கள அறிஞர்களை தமிழ்கலைகளைப்பற்றித் தெரியாதவர்களை வரவழைக்கிருர்கள். எம்மினத்தில் கலைகளைப்பற்றி அறிந்த அறிஞர்கள் இல்லையா? இது எமது அடிமைப்புத்தியைக் காட்டுகிறது அல்லவா;

இப்படியான நிலையில் நாம் தமிழ்நாடு எடுப்பதுஎப்படி?

—மணிவண்ணன்

## நண்பர்கள் தேவையா



அனைத்துலக கலாசார நட்புறவு விபரங்களுக்கு தபாற்செலவுடன் விண்ணப்பியுங்கள். "சந்திரோதயம்," சர்வதேச பேனு நண்பர்கள் தலைவர், 265/8, சேர்ப்பன் டைன் பாதை, பொரளை. கொழும்பு—8.

---

**சுதந்திரன் சந்தா**

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00

அரை ஆண்டு „ ரூ. 25.00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

"சுதந்திரன்"

238, பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

---


**பாவியுங்கள்**




ரேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

ரேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரேயல் பேக்கிங்பவுடர்
ரேயல் கஸ்டட் பவுடர்
ரேயல் கோண் பிளவர்
ரேயல் பிஸ் மக்ஸ்
ரேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

**சிவா இண்டஸ்றீஸ்**

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

---

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) 7-வது வாரம்

எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் சினிவாசன் மற்றும் பலர் நடித்த—

**ஊருக்கு உழைப்பவன்**



---

3-வது வெற்றி வாரம்

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை] **நீகல்** [மட்டுநகர்]

கமலாலயம் மூவீஸ் அளிக்கும்

# வாடைக்காற்று

ஏ. ஈ. மனோகரன், சந்திரகலா, ஆனந்தராணி டொக்டர் இந்திரகுமார், கே எஸ், பாலச்சந்திரன், கே.ஏ.ஜவாஹர், எஸ். யேசுரட்ணம், ஏ. பிரான்சிஸ், கே.கந்தசாமி மற்றும்பலர் நடித்த-

- தென்னிந்திய திரைப்பட நட்சத்திரங்களின் பாராட்டைப்பெற்ற திரைப்படம்.

---

**கிங்ஸ்லி** (கொழும்பு) 6-வது வாரம்

ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா நடித்த

# ஜானகி சபதம்

5-வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்நகர்) **பிளாஸா** (வெள்ளவத்தை)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

# கிரகப்பிரவேசம்

(கலர்)

---

மகத்தான புத்தாண்டு வெளியீடு!

**கெப்பிட்டல்** (கொழும்பு) **லிடோ** (யாழ்நகர்)

சிவபாதவிருதயர் BSc., வேதநாயகம், டீன்குமார், ஜவாகர், சந்திரகலா, ஹெலன், செல்வம், அமரசிங்கம் நடித்த ஒப்பற்ற திரையோவியம்!

ராஜேஸ்வரி பிலிம்சாரின்

# தென்றலும் புயலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்